விவேகானந்தரும் விடுதலைப்போரும்



செ. திவான்

விவேகானந்தரும் விடுதலைப்போரும்

வரலாற்றுப் பேரறிஞர் **செ.திவான்** M.A.,M.Phil., P.hd

ரெகான் சுலைமான் பதிப்பகம்
106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
நெல்லை, பாளையங்கோட்டை - 627002
போன்: 0462-2572665

ஆசிரியரின் 110 வது நூல்

பதிப்பு ஆண்டு: நவம்பர், 2019, பக்கங்கள் : 12, விலை : ரூ.15

விவேகானந்தரும் விடுதலைப் போரும்

அன்பின் அமைவிடம் அறநெறியின் உறைவிடம் ஆன்மீக இமயம், பண்பாட்டில் தொட முடியாத சிகரம் அணையா விளக்கு, மனிதமே மதம் என்பதை உலகிற்கு ஓங்கி ஒலித்த தீர்க்கதரிசனம். வாசிப்பதையே சுவாசிப்பாய் கொண்டவர் சர் ஜான்லுப்பக் எழுதிய மிகப்பெரிய நூலை குறுகிய நாளில் வாசித்தவர்.

சிக்காகோவில் மகாசபையில் ஒலித்த மங்கல மணி மூடக் கொள்கைகளின் சாவு மணியாக விளங்கட்டும். வாளினாலோ, எழுதுகோலினாலோ ஒருவரை ஒருவர் பகைக்கின்ற கொடுஞ் செயல்கள் முற்றிலும் அகலட்டும் அன்போடு கூடிய எண்ணங்கள் பெருகி நிறையட்டும் என்றும் அவர் முழங்கியதால் அவரது பெருமைகளை இன்றளவும் பேசுகிறோம். பேசுவோம்.

உதவி செய்; சண்டை இடாதே' ஒன்றுபடுத்து அழித்துவிடாதே, சமரசமும் அமைதியும் வேண்டும் கருத்து வேறுபாடு வேண்டாம் என்பதை ஒவ்வொரு சமயமும் தனது கொடியில் எதிர்ப்புக்கு இடையே விரைவில் எழுதும் என்று சுவாமிஜி உலக சர்வமத சபையில் நிறைவுநாள் பொழுதில் ஆற்றிய உரை இன்றும் தேவைப்படுகிறது.

ஐந்து அடி ஒன்பது அங்குல உயரம் உருண்டு திரண்ட புயங்கள் செலுக்கி வைத்தாற் போன்ற முக அமைப்பு அடர்த்தியான கழுத்து மலர்ந்து அகன்ற கண்களில் வீரப்பார்வை நிமிர்ந்து நிற்கும் காட்சி கண்டால் கோழைத்தனமும் பலவீனமும் மரணமும் பின்னங்கால் பிடரியில் அடிபட ஓடும்.

தேச சஞ்சாரி

1892 ஜூலை மாதம் பிற்பகுதி சுவாமிகள் அமெரிக்கா செல்வதற்கு முன் தேச சஞ்சாரி. பாரதபூமியின் ஆன்மிக, கலாச்சார கூறுகளை ஆராய்ந்தறியும் அற்புதப்பயணம் அப்போது பம்பாயில் (மும்பை) பிரபல வழக்கறிஞர் ராமதாஸ் சபில் தாஸ் வீட்டில் சுவாமி தங்கியிருந்தார். அங்கு சுவாமி அபேதானந்தரையும் சந்தித்தார். பின் பம்பாயிலிருந்து பூனாவிற்கு கிளம்பினார். வழியனுப்ப விக்டோரியா டெர்மினஸுக்கு அன்பர்கள் வந்திருந்தனர். அதே இரயிலில் பயணம் செய்ய லோகமான்ய பாலகங்காதர திலகரும் வந்திருந்தார். இருவரும் அறிமுகம் ஆனார்கள். பூனாவில் சுவாமி திலகரின் இல்லத்திலே தங்கிட ஏற்பாடு; இருவரது இரயில் பயணம்; திலகர் சொல்கிறார்:

திலகர் இல்லத்தில்

“எட்டு அல்லது பத்து நாட்கள் எனது வீட்டில் அவர் தங்கியிருந்தார் நான் ஒரு சந்நியாசி அவ்வளவு தான் என்றார். பெயரைச் சொல்லவில்லை; மேடைப் பேச்சும் இல்லை, கையில் சல்லிக்காசு கூட இல்லை ஹிராபாக்கில் தக்காண சங்கத்தில் திலகர் உறுப்பினர், அதன் வாராந்திரக் கூட்டம் கோவிந்தநாதர் சிறப்புரை; திலகருடன் விவேகானந்தரும் சென்றிருந்தார். கோவிந்தநாதர் பேச்சை மாற்றுக் கோணத்தில் மிகவும் தெளிவான முறையில் சரளமான ஆங்கிலத்தில் சுவாமி விவாதித்தார். பின்னர் ஓரிரு நாளில் பூனாவிலிருந்து புறப்பட்டு விட்டார்.

அமெரிக்கப்பயணம்; அமோக வெற்றி; அன்னை நாடு திரும்புதல்; அபாரவரவேற்புகள்; அவரது புகைப்படங்கள் பத்திரிகைகளில் திலகர் பார்க்கிறார். இந்த முகத்தை எங்கேயோ பார்த்த ஞாபகம்; விவேகானந்தரை அறிந்து கொள்கிறார் இவர் தான் தன்னோடு தங்கியிருந்தவர்

என்பதை" பூனாவிற்கு வரச் சொல்லி கடிதம் எழுதுகிறார். ஆனால் சுவாமி பூனாவிற்குச் செல்ல இயலவில்லை. 1896 டிசம்பர் 28, 29, 30, 31 நாட்கள் கல்கத்தாவில் ரஹிமமல்லா எம்.முஹம்மது ஸயானி தலைமையில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம். திலகர் கலந்து கொண்டார். கூட்டம் நிறைவுற்றதும் பேலூர் மடம் சென்றார் திலகரும் நண்பர்களும் – சுவாமி விவேகானந்தர் அன்போடு வரவேற்றார். சிற்றுண்டி நடந்தது. சுவாமி உரையாடல் அப்போது வேடிக்கையாகச் சொன்னார். நீங்கள் சந்நியாசம் வாங்கிக் கொண்டு வங்காளம் (கல்கத்தா) வந்துவிடுங்கள் என் காரியத்தைச் செய்யுங்கள். நான் மும்பை மகாராஷ்டிரம் சென்று இதே பணியைத் தொடருகிறேன். ஏனெனில் யாருமே தங்கள் சொந்த ராஜ்யத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. அரசியல் புரட்சிக்குத் திலகர்; ஆன்மிகப் புரட்சிக்கு சுவாமிஜி.

சுதந்திர வித்து உள்ளத்தில்

1863 ஜனவரி 12 பிறப்பு காலை 6 மணி 33 நிமிடம், 33 வினாடி சூரிய உதயத்திற்கு ஆறு நிமிடங்களுக்கு முன்பு மகர சங்கராந்தி, சூரியன் வடக்கு நோக்கித் தனது பயணம் தொடங்கும் உத்தராயண நாள் தமிழர்களுக்குப் பொங்கல், – காசி வீரேசுவர சிவ பெருமான் அருளில் பிறந்த குழந்தை – அதனால் **வீரேசுவன்** என்ற பெயர்; பின்; **பிலே** பின் நரேந்திரநாத், நரேன்,

1857 இந்தியசுதந்திரப்பெரும்போர்

1789 பிரெஞ்சுப் புரட்சி – சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்

1792 இங்கிலாந்தில் மகாகவி ஷெல்லி பிறந்தார்.

(பாரதி தன்னை ஷெல்லிதாசன் என்று அழைத்துக் கொண்டான்.)

பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை ஷெல்லி.

1905 இல் ரஷ்யப் புரட்சி – அதன் குழந்தையாக பாரதியை தொ.மு.சி. பார்ப்பார்.

1857 சிப்பாய் புரட்சியின் குழந்தை

1863இல் பிறந்த விவேகானந்தர்

விவேகானந்தருக்கு இளம் வயதில் இந்தத் தாக்கம். **கப்பல் பயணம்** பற்றி ஒரு கட்டுரையில் பல நாட்கள் கடற்பயணம் – கப்பல் கவிழ்ந்திடுமோ என்ற கவலை. ஆங்கிலேயர்கள் பீர் குடித்து மயங்கிக் கிடந்தார்கள் – இந்தியர்கள் துணிச்சலுடன் இருந்தார்கள். இந்தியச் சிப்பாய் புரட்சியில் கோழைத்தனத்தோடு சிப்பாய்கள் நடந்திருக்க வாய்ப்பில்லை. இந்தியச் சிப்பாய்களை வழி நடத்த அவர்களுக்கேற்ற தலைவர்கள் இருந்திருக்க வேண்டும்' என்று விவேகானந்தர் பதிவு செய்துள்ளார்.

ஜெனரல் ஸ்ட்ராங்

இந்தியச் சிப்பாய்களின் தலைவர்கள் படைகளுக்கு முன் நின்று சிப்பாய்களை வழி நடத்துவதற்குப் பதிலாக வீர இளைஞர்களே போரிடுங்கள்! முன்னேறுங்கள்! என்று சிப்பாய்களை முன்னால் விட்டு தாங்கள் பின்னால் இருந்ததால் தோற்றது என்றார் ஜெனரல் ஸ்ட்ராங். கட்டளையிடும் அதிகாரிகள் படையை வழி நடத்தும் விதத்தில் படைக்கு முன் சென்று மரணத்தை துணிச்சலோடு சந்திக்கவேண்டும்.

அண்ணல் முஹம்மது நபி (ஸல்)

அதுவரை சிப்பாய்கள் முழுமனதோடு போரிட மாட்டார்கள் என்றார் விவேகானந்தர். அண்ணல் முஹம்மது நபி (ஸல்) தான் சந்தித்த போர்க்களங்களில் முன்னணியில் முதல் ஆளாக எதிரிகளுக்கு நெருக்கமாக இருப்பதை அரேபிய வரலாற்றின் பக்கங்களில் படித்தறிந்தவன் அடியேன்.

சீவகசிந்தாமணி 2293 வது பாடல் (திருத்தக்கத்தேவர்)

'குஞ்சரங்குனிய' என்று துவங்கி

வெஞ்சமநோக்கி நின்று மிறைக்கொளி திருத்துவாற்கண்
அஞ்சிமற்றரசர் யானைக் குழாத்தொடு மிரிந்திட்டாரே
சீவகமன்னனை துரோகத்தால் வீழ்த்திய
கட்டியங்காரனது படைகளை எதிர்த்து
சீவக மன்னரின் தளபதி சலநிதி
போரிடத்துவங்கினான்

யானைகள் செத்து வீழும்படி
வீசி வளைந்துபோன தனது
இரத்தம் தோய்ந்தவாளை,
தன் மார்பிலே வந்து
தைத்திருந்த
வேலைப்பிடுங்கி எடுத்துவிட்டு,
அவ்வேல்பாய்ந்த
புண்ணிலே நுழைத்து
அதன் வளைவை நிமிர்த்தியதைக்கண்ட
எதிரிகள் பயந்து நடுங்கி
யானைகளோடு போர் களத்தை
விட்டு ஓடத்துவங்கினர்

நீ ஒரு நற்காரியத்திற்காக உனது உயிரைவிட முடியுமென்றால் மட்டுமே நீ ஒரு தலைவனாக இருக்க முடியும் என்றார் விவேகானந்தர்

சுவாமிஜிக்கு சமயமே தேசியம்! தேசியமே சமயம். மக்களது துன்ப துயரங்கள், வறுமை, அடிமைத்தளம் எல்லாவற்றுக்கும் பெரிதும் அவர்களே பொறுப்பாளிகள். அவர்கள் விழித்தெழுந்து நிமிர்ந்து நின்று ஆண்மையும், வீரமிக்க மனிதர்களாக மாற்றி தமக்குத் தாமே உதவிக் கொள்ளத் துணியவேண்டும், துன்பு துயரங்களிலிருந்து விமோசனத்தையும் விடுதலையும் தேடிக் கொள்ள முடியும். இதற்கான தன்னம்பிக்கையையும், ஆண்மை உணர்வையும் நாட்டு மக்கள் உள்ளத்தில் உருவேற்றும் வீராவேச இடிமுழக்கங்களாக அவரது பிரசங்கங்கள் எழுத்துக்கள் விளங்கின. நிவேதிதா தேவியிடம் ஒருமுறை சொன்னார். எனது பணி ராமகிருஷ்ணரின் போதனைகளையோ வேதாந்தத்தையோ பரப்புவதல்ல. மாறாக மக்களுக்கு ஆன்மையூட்டுவதுதான் நாம் அணிந்துள்ள இந்த மஞ்சள் உடை துறவி உடை போர்க்களத்தில் அணியப்படும் மரண உடையேயாகும். இலட்சயத்திற்காக மரணம் அடைவதே நமது குறிக்கோள் (Sisternivedita, Pravrajika Atmaprana, 1969, Page 89, 109)

33 கோடி மக்களான நாம் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கிடக்கும் நமது உடல்களின் மீது நடந்து செல்லத்

துணிந்துவிட்ட, விரல் விட்டு எண்ணக்கூடிய எந்தவொரு அன்னியராலும் கடந்து ஓராயிரம் ஆண்டுகளாக ஆளப்பட்டு வந்திருக்கிறோம். காரணம் அவர்களுக்குத் தம்மிடம் நம்பிக்கை இருந்தது; நமக்கு அது இல்லை; நமக்கு நம்மிலேயே நம்பிக்கை தேவை; பலம் தான் வாழ்க்கை; பலவீனம் மரணமேயாகும். ஒவ்வொரு தேசமும் தன்னைத்தானே காப்பாற்றிக் கொண்டாக வேண்டும்.

உற்றாரும் மிக மிக உங்கள் அன்புக்குரியவரும், உறவினரும் கதறியழுதாலும் கூடத் திரும்பிப் பார்க்காதீர்கள். திரும்பியே பாராதீர், முன்னாலேயே பாருங்கள். **ஆண்மையுள்ளவர்கள் நேர்மை உள்ளவர்கள் நூறுபேர் இருந்தால் உலகமே புரட்சிகரமாக மாறிவிடும்.**

இங்கிலாந்து இந்தியாவிற்குச் செய்வதெல்லாம், குரல்வளையை நெரித்துக் கொண்டிருக்கும் கையைக் கொண்ட வேறொருவர் இடும் ஆணை என்பேன். தமது நாட்டுக்காக முழுக்க முழுக்க நேர்மையோடு தமது சகலத்தையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கும் மனிதர்களை நீங்கள் பெறும்போதுதான் அத்தகைய மனிதர்கள் துள்ளியெழும்போது தான் இந்தியா எல்லா அம்சத்திலும் பெருமை படைத்ததாகமாறும். நாம் தேடிப் பெறவேண்டியது விடுதலை, விடுதலை தான் கடவுள், அன்பு தான் கடவுள் அடிமைப்பட்டு இருப்பவை யாவும் கடவுள் அல்ல. **நமது மாபெரும் இந்தியத்தாய் – இதுவே இது மட்டுமே அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கும்** நமது தாரகமந்திரமாக இருந்தாக வேண்டும். விழித்துக்கொண்டிருக்கும் தெய்வம் இது ஒன்றே (Complete works of Vivekanada, 3, 4, 5, 6, 7) தொகுதிகள்.

இந்திய தேசிய இயக்கத்தின் தந்தை

சுவாமி விவேகானந்தர் தேச பக்தர்களுக்கெல்லாம் மேலான தேச பக்தராகவும், இந்திய தேசிய இயக்கத்தின் தந்தையாகவும் விளங்கினார். அதன் மிக உயர்ந்த மிக உன்னதமான அம்சங்களையெல்லாம் விவேகானந்தர் தமது சொந்த வாழ்க்கையிலே கொண்டிருந்தார் என்று பிரபல சரித்திர ஆசிரியர் **ஆர்.ஜி.பிரதான்** (R.G.Pradhan India Struggles for Swaraj Page 60) கூறி உள்ளார்.

பார் அதிரக் கவிபாடிய மகாகவி பாரதி 1908 ஜூன் 6 இல் இந்தியா இதழில் எழுதுகிறார்.

'காலஞ்சென்ற விவேகானந்தப் பரமஹம்ச மூர்த்தியே இந்திய சுயாதீனக் கிளர்ச்சிக்கு அஸ்திவாரம் போட்டவர் எனது பாசத்திற்குரிய நண்பர் மறைந்த ரா.அ. பத்மநாபன் பாரதி புதையல்' என இரண்டு பாகங்கள் தந்துள்ளார். அதில் வரும் செய்தி இதோ;

விவேகானந்தரின் தேசபக்தி பற்றி இந்தியா பத்திரிகையிலிருந்து எடுத்து கலைமகள் 1944 சூன் மாதம் வெளியிட்டது. அதில் 'நம்மவரின் அதிருஷ்டத்தாலும் ஈசனுடைய திருவருளாலும் மற்றெல்லா மாயைப் படலங்களையும் அறுத்தெறிந்துவிட்ட விவேகானந்தர் சுதேசப் பற்றை மட்டிலும் நெடுஞ்காலம் கொண்டிருந்தார்' இது பாரதியின் கூற்று.

1863 இல் சுவாமிஜி பிறந்தார்.

1885 இல் காங்கிரஸ் ஆலன்ஆக்டேவியன்ஹியூம் எனும் ஆங்கிலேயரின் தயவால் தோன்றியது. 1902 ஜூலை 4 வெள்ளி மாலை 6.30 பிறகு இரவு 9 மணி மாபெரும் இமயம் விவேகானந்தரின் உடல் பார்வையிலிருந்து மறைந்தது. அதுவரை காங்கிரஸ் கோரிக்கை மனுக்களையும் குயின் விக்டோரியாவை வாழ்த்தியும் பாடிக்கொண்டிருந்த காலத்தில் கொள்கை முழக்கிய கொள்கைத் தங்கம் விவேகானந்தர்.

அமெரிக்காவில் சுவாமிஜி தங்கியிருந்த நாட்களில் ஜார்மன்னின் எதேச்சதிகாரத்தை எதிர்த்துப் பலாத்கார நடவடிக்கைகளில் பங்கேற்ற அராஜகவாத சோசலிச இயக்கத் தலைவர் பாகுனினை சந்தித்தார் (தமது சீடர் கிறிஸ்டினாவிடம் இன்னொரு சகாப்தத்தைத் தோற்றுவிக்கும் அடுத்த எழுச்சி ரஷ்யாவிலிருந்து வரும் என்றார். சீடரிடம் கூறியது. இது 1896) ரஷ்யாவில் புரட்சி வந்ததா? இல்லையா? விவேகானந்தர் கணிப்பு சரியா? இல்லையா? ஜார்கொடுங்கோலனுக்கு எதிராகப் புரட்சி; பல நாடுகளில் பலர் தலைமறைவு. 1895 இங்கிலாந்தில் ரஷ்யப் புரட்சிவாதி பீட்டர் குரோ போட்கினை சுவாமிஜி சந்தித்துப் பேசினார். (Indian National Liberation movement, and Russia P.B. Sinha, 1975 page 237,)

1898 ஆகஸ்ட் இறுதி நியூ இங்கிலாந்து அனிஸ்குவாம் சிற்றூர் – பேராசிரியர் ரெய்ட் இல்லம் 'ஆங்கில ஏகாதிபத்தியம் இந்தியாவிற்கு இழைத்துள்ள தீமைகளைக் குறித்துக் காரசாரமாக உரையாற்றினார் விவேகானந்தர்.

1899 இல் மேரிஹேல் என்ற பெண்மணிக்கு சுவாமிஜி எழுதிய கடிதம் 'இந்தியாவில் சில ஆண்டுகளாக ஓர் இரத்த பயங்கர ஆட்சியே நிலவி வந்துள்ளது. **ஆங்கிலேயப் போர் வீரர்கள் எங்கள் மக்களைக் கொன்றும், எங்கள் மாதர்களைக் கற்பறித்தும் வருகின்றனர். எல்லாம் எதற்காக? எங்கள் செலவில் வழிச்செலவும், பென்ஷனும் பெற்றுத் தமது தாயகத்திற்கு** *அனுப்புவதற்காகத்தான் ஒருவேளை நீங்கள் இந்தக் கடிதத்தை வெளியிட்டீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்.* **இந்தியாவில் இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டம் என்ன இங்கிருந்து இந்தியாவிற்கு இழுத்துச் சென்று விசாரணையே இல்லாமல் என்னைக் கொல்வதற்கு ஆங்கிலேயே அரசாங்கத்திற்கு அனுமதியளிக்கும்.**

தீவிர அரசியல்வாதி விவேகானந்தர் தேசீய வீரராக வரவேற்கப்பட்டார்.

I have travelled all over India for organizing veuolution, Manufacturing guns, ect..

1898 ஜூன்4 காஷ்மீர் – அல்மோரா சென்றார். சீடர்களோடு தங்கியிருந்தார். அமெரிக்க நாட்டின் சுதந்தரத்தை ரகசியமாகக் கொண்டாடினார். **'ஜூலை 4 ஆம் தேதிக்கு'** *என்ற பாடலையும் இயற்றினார். தங்கியிருந்த படகு இலைகளினால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அதில் அமெரிக்கச் சீடர்களுக்கு தேநீர் அளித்தார்.*

இந்தியாவில் இருந்த இந்திய விடுதலைக்கான புரட்சி நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டவர் விவேகானந்தர் 1898 மே 22 நிவேதிதா – அல்மோராவிலிருந்து திருமதி ஹாம்மாண்டுக்கு எழுதிய கடிதம் சுவாமிஜியை ஒற்றர்கள் மூலம் போலீஸ் கண்காணித்து வருவதையும், தகவல் கிடைத்ததும் அதைக்கண்டு சுவாமிஜி சிரித்ததும் வரலாற்று உண்மை.

அனுசீலன் சமிதி என்ற ரகசிய இயக்கத் தலைவர் சகாராம் கணேஷ் தேஷ்ஷ்கர் என்ற புரட்சியாளரிடம் விவேகானந்தர் கூறினார்.

'இந்தியா ஒரு வெடிமருந்துக் கிடங்காகமாறும், தமது மரணத்துக்கு முன்பே இந்தியாவில் ஒரு புரட்சி நடக்கும்.

ஆர்.சி.மஜூம்தார்

To sakharam Ganesh Deushar Swamiji is Said to have remarked that India would be a Powder, Magazine and there would be a revolution before his death.

R.C.Majumdar, 1962, Calculata History of the freedom movement in India, volume I, Page 464.

ஆனால் துர்ப்பாக்கியம் 39வது வயதிலே சுவாமிகள் மறைவு.

விவேகானந்தரின் காலம் தேசபக்த முயற்சியின் தொடக்க காலம். விடுதலைப் போராட்டமே ஒரு வடிவமாக உருவெடுக்காத இருண்ட காலம் தெய்வ பக்தியோடு தேச பக்தியையும் இணைத்துப் பேசினார் சுவாமிஜி.

சங்கரிபிரசாத்பாசு

இந்திய விடுதலை இயக்கத்தின் மீது விவேகானந்தர் ஏற்படுத்திய தாக்கத்தை கல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியர் விவேகானந்த இயல் ஆய்வாளர், சாகித்திய அகாதெமி விருது பெற்ற சங்கரி பிரசாத் பாசு அழுத்தமான ஆய்வுக் கட்டுரை மூலம் பதிவு செய்துள்ளார்.

கார்மிக்கேல் பிரபு தர்பார் உரையில், ராமகிருஷ்ணமடத்தின் நடவடிக்கைகளை கடுமையாகக் கண்டித்துள்ளார்.

கார்மிக்கேல்பிரபு உரை

“வேதாந்தக் கழகத்தின் போதனைகள் அரசியலில் தேசியவாதத்தை நோக்கிச் செல்கின்றன. சுவாமி விவேகானந்தர் தாமே பொதுவாக அரசியல் பகுதியைத் தவிர்த்து வருகிறார். ஆனால் பல தேசியவாதிகள் அவரைத் தங்கள் இயக்கத்தின் கருவாகக் கருதுகின்றனர்.’ இது கார்மிக்கேல் பிரபு உரை பல அங்கீகரிக்கப்பட்ட மடாலயங்கள் அரசியல் அகதிகளுக்குப் புகலிடமளித்து வருகின்றன. *இந்த ஆசிரமங்கள் புரட்சிகரக் கொள்கைகளைப் பரப்பும் மையங்களாக இருக்கின்றன. கிழக்கு வங்கத்தில் அச்சமூட்டும் அளவிற்கு மிக வேகமாகப் பரவிவருகின்றன.*

விவேகானந்தரது வீரவரிகள்

'தேச முன்னேற்றம் எனும் தேர்ச்சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்'

நெருப்புப் பிழம்பு போன்ற இலட்சியப் பணியாளர்களின் குழு ஒன்று இப்போது எனக்குத் தேவை.

வலிமைதான் வாழ்வு, பலவீனமே மரணம் வலிமையே மகிழ்ச்சியான வாழ்க்கை ஓ! சிங்கங்களே! எழுந்து வாருங்கள் நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள். என்னால் எந்தக் குறைபாட்டையும் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் கோழைத்தனத்தை மட்டும் தாங்க முடியாது. ஒருவர் ஒரு அடி அடித்தால் இரண்டு மடங்கு கோபித்துப் பத்து அடிகள் திருப்பித்தரவேண்டும் இதுதான் ஆண்மை ஓ! கோழையே! முட்டாள்தனமாக என்ன பேசுகிறாய்? இப்படி முடியாது! முடியாது' என்று அழுது அழுது தான் இந்த நாட்டையே நாசமாக்கி விட்டீர்கள். மனித முயற்சியால் செய்ய முடியாதது என்ன இருக்கிறது?

அஞ்சா நெஞ்சம்

எல்லாத் தீமைகளையும் எதிர்த்துப் போரிடும் எண்ணத்தில் ஏற்படும் தீமைகள் முதலிய எல்லாத் தீமைகளோடும் போரிட்டுக் கொண்டே இரு. தைரியமான சொற்கள் – மிகவும் தைரியம் நிறைந்த செயல்கள் வீரர்களாக்கும் கொள்கைகள் ஆகியவையே நமக்கு இப்போது வேண்டும். இரும்பு போன்ற நரம்புகளும் எதனாலும் தடுக்க முடியாத வஜ்ராயுதம் போன்ற அளவற்ற மனவலிமை வாய்ந்தவர்களே நம் நாட்டிற்குத் தேவை. மரணத்தை நேருக்கு நேரே சந்திக்க வேண்டி வந்தாலும் எடுத்த காரியத்தை எவ்வாறேனும் முடிக்கும் அஞ்சா நெஞ்சம் இவையே நமக்கு இப்போது வேண்டும்.

1908 **ஸ்வதேச கீதங்கள்** *சமர்ப்பணம்*

ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்தும நிலை விளக்கிய தொப்ப எனக்கப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக காட்டி, ஸ்வதேச பக்தியுபதேசம் புரிந்தருளிய குருவின் சரணமலர்களில் இச்சிறுநூலை சமர்ப்பிக்கிறேன்.

1909 ஜன்மபூமி (ஸ்வதேச கீதங்கள் இரண்டாம் பாகம்) எனக்கு ஒரு கடிகைகளிலே மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாமல் உணர்த்திய குருமணியும் விவேகானந்தருடைய தர்மபுத்திரியும்

ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை சமர்ப்பிக்கிறேன். (1898 ஜனவரி 28இல் இந்தியா வந்த மார்க்கரெட் எலிசபெத் நோபிளுக்கு 1898 மார்ச்சில் நிவேதிதா என்று பெயர் சூட்டப்பட்டது.)

ஞானரதம் : ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது.

1910 துவைதம் – உரைநடைநூல் நிவேதிதா தேவிக்கு சமர்ப்பணம், 4 நூல்கள் நிவேதிதா தேவிக்கு சமர்ப்பணம் நிவேதிதாதேவியை பாரதி சந்தித்தார் – குரு உபதேசம் செய்தார்.

பாரதி சொல்கிறார்

சொன்ன சொல் ஏதென்று சொல்வேன் – எனைச் சூதாய் தனிக்கவே சும்மாயிருத்தி..., என்று இருவரும் தனிமையில் உரையாடினார்கள்.

ஸ்வதேச பக்தி உபதேசம்

"தனது மேலங்கியை மார்பு எதிரே பிய்த்துத் திறந்து உங்களுக்கு தைரியம் வேண்டும்" என்று பாரதியிடம் கூறினார் நிவேதிதா. எங்களை இங்கே குத்திக் கொல்ல உங்களுக்குத் தைரியம் வேண்டும். பாரதியின் ஆப்தநண்பர் எஸ்.துரைசாமி ஐயர் கூற்று ரா.அ.பத்மநாபன் – சித்திரபாரதி பக்கம் 24.

பாரதியைப் பார்த்து நிவேதிதா கூறியது. கருகிப் போன எலும்புகளும் கூட உயிர் பெற்று அசையத் தொடங்குகின்றன என்றால் அவற்றுக்குத் சகோதரி நிவேதிதா செலுத்திய உயிர் மூச்சு என்றார் **ராஷ்பிகாரி கோஷ்.** (1907 சூரத் காங்கிரஸ் தலைவர்) பிரிட்டிஷ் பத்திரிகையாளர் H.W நெவின்ஸன் 'ஜீவ சக்தி மிக்க நிவேதிதாவின் ஆளுமை முழுவதுமே எனக்கு நெருப்பைத் தான் நினைவூட்டியது' என்று எழுதுகிறார்.

சரித்திரத்தேர்ச்சிகொள்

எனவேதான் பாரதி புதிய ஆத்தி சூடியில் **அச்சம் தவிர். ஆண்மை தவறேல் ஏறுபோல்நட, ஒற்றுமை வலிமையாம் கீழோர்க்கு அஞ்சேல். குன்றென நிமிர்ந்து நில் கேட்டிலும் துணிந்து நில், கொடுமையை எதிர்த்து நில். சரித்திரத் தேர்ச்சி கொள். சாவதற்கு அஞ்சேல் சிதையா நெஞ்சு கொள்; செய்வது துணிந்து செய் தீயோர்க்கு அஞ்சேல். தேசத்தைக் காத்தல் செய் நினைப்பது முடியும்.**

நேர்படப்பேசு, நையப்புடை; புதியன விரும்பு. பூமி இழந்திடேல்; பெரிதிலும் பெரிது கேள்; பேய்களுக்கு அஞ்சேல். போர்த்தொழில் பழகு ரௌத்திரம் பழகு. வீரியம் பெருக்கு; வெடிப்புறப் பேசு, வையைத் தலைமை கொள் *இளைஞர்களை எழச் செய்ய விவேகானந்தர் அவரது மறைவிற்குப் பிறகு விடுதலைக்கு உழைத்த நிவேதிதா வழியில் பாரதி நமக்குச் சொன்ன விடுதலை முழக்கங்கள் அன்றோ!*

வரலாறு கண்ட வஞ்சம்

1893 ஆகஸ்ட் 27 பேராசிரியர் ரைட்டின் இல்லம் - நியூ இங்கிலாந்து, விவேகானந்தர் ஆற்றிய உரை 'வரலாறு கண்ட வஞ்சம்' 'ஆங்கிலேயர்கள் நமது கழுத்தின் மீது குதிகாலை வைத்து நசுக்குகிறரர்கள். தங்கள் மகிழ்ச்சிக்காக கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கின்ற வரையில் நம்மை அட்டையைப் போல உறிஞ்சுகிறார்கள்.

கோடிக்கணக்கில் பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு போய் விட்டனர். ஊர் ஊராக மாவட்டம், மாவட்டமாக எங்கள் மக்கள் பசிப்பிணியில் வாடி வருந்துமாறு பிரிட்டிஷார் தகாத தீச்செயல்களைப் புரியலாமா? ஆண்டவன் வஞ்சம் தீர்ப்பான். இந்த வஞ்சத்தை சமய நோக்கில் உணராமல் இருக்கலாம். அரசியலில் இதை அறியாமல் இருக்கலாம். ஆனால் வரலாற்றுப் பதிவில் பார்த்தே தீர்வீர்கள் கொடும் படையெடுப்புகளில் ஆங்கிலேயரின் படையெடுப்புதான் மிகுந்த இன்னல்களை வரவழைத்துள்ளது.

'இந்து மன்னர்கள் நமக்கு விட்டுச் சென்று இருப்பது என்ன? அற்புதமான கோயில்கள், மொகலாய மன்னர்கள் நமக்கு விட்டுச் சென்று இருப்பது என்ன? அழகிய அரண்மனைகள்; பிரிட்டிஷ் ஆட்சி நமக்கு விட்டுச் சென்று இருப்பது என்ன? மலைபோன்று குவிந்து கிடக்கின்ற உடைந்துபோன பிராந்தி பாட்டில்களைத் தவிர வேறு ஒன்றுமில்லை?

விவேகானந்தரின் சுதந்திரக்கனல் தெறிக்கும் இந்தப் பேச்சை அவர் காலத்தில் அல்லது அதற்கு முந்தியோ எவரும் சொன்னதில்லை. வாழ்க இந்திய தேசிய இயக்கத்தின் தந்தை விவேகானந்தரின் புகழ்.

(நெல்லை விவேகானந்தர் மன்றத்தில் 3.10.2019 அன்று பேராசிரியர் பா. வளன் அரசு தலைமையில் செ. திவான் ஆற்றிய உரை)

ரெகான் பதிப்பகம்
பாளையங்கோட்டை

இந்து மன்னர்கள்
நமக்கு விட்டுச் சென்று இருப்பது என்ன?
அற்புதமான கோயில்கள்

மொகலாய மன்னர்கள்
நமக்கு விட்டுச் சென்று இருப்பது என்ன?
அழகிய அரண்மனைகள்

பிரிட்டிஷ் ஆட்சி
நமக்கு விட்டுச் சென்று இருப்பது என்ன?
உடைந்துபோன பிராந்தி பாட்டில்கள்

– சுவாமி விவேகானந்தர்